01 DEC 2021
திருநெல்வேலி

இணை ஆணையர் ( மாநில வரி)
26 NOV 2021
14072
திருநெல்வேலி கோட்டம்

<u>சுருக்கம்</u>

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – வணிகவரித்துறை – திருநெல்வேலி கோட்டம் திரு. பா. பாலகிருஷ்ணன் என்பவர் கருணையடிப்படையில் 20.04.2007 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்து – ஆணை வெளியிடப்படுகிறது .

---

<u>வணிகவரி மற்றும் பதிவுத்(அ2)துறை</u>

அரசாணை (டி) எண். 145

நாள்: 29.09.2021
பிலவ , புரட்டாசி–13,
திருவள்ளுவர் ஆண்டு, 2052

படிக்கப்பட்டன:

1. துணை ஆணையர் (வணிகவரி), திருநெல்வேலி கோட்டம் அவர்களின் செயல்முறை ந.க.எண்.அ8/2806/2007, நாள் 13.04.2007.
2. வணிகவரி ஆணையரின் கடித எண்.ஓய்3/2984/2012, நாள் 07.03.2013, 27.05.2013, 24.09.2013, மற்றும் 16.04.2019.
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
4. கூடுதல் ஆணையரது (நிர்வாகம்), (வணிகவரி ஆணையர் அலுவலகம்) கடித எண்.ஓய்3/740729/ 2020, நாள் 07.02.2021.

*****

<u>ஆணை:</u>

வணிகவரித் துறையில், திருநெல்வேலி கோட்டத்தில் பதிவுரு எழுத்தராகப் பணிபுரியும்போது 05.11.1981 அன்று மறைந்த திரு.எஸ்.பாலகிருஷ்ணன் என்பவரின் மனைவி திருமதி. பா.அழகுசுந்தரி என்பவர் தமக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வேண்டி 20.11.1981 அன்று விண்ணப்பித்துள்ளார் என்றும் பின்னர் 18 ஆண்டுகளுக்குப்பின் தனது மகன் திரு.பா.பாலகிருஷ்ணன் என்பவருக்கு பணி நியமனம் வேண்டி 31.3.2000 அன்று மீண்டும் விண்ணப்பித்துள்ளார் என்றும் அவ்விண்ணப்பத்தின் மீது விசாரணை மேற்கொண்டு ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறைகளின்படி, திரு.பா.பாலகிருஷ்ணன் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்டார் என்றும், தனியர் திருநெல்வேலி கோட்டம், பாளையங்கோட்டை, வணிகவரி அலுவலர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக 20.4.2007 முற்பகல் அன்று பணியேற்பு செய்துள்ளார் என்றும், தனியரின் தற்காலிக பணி நியமனத்தை வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு மேலே இரண்டாவதாக மற்றும் நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில் வணிகவரி ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. முதன்மைச் செயலாளர் / வணிகவரி ஆணையரின் பரிந்துரையினை ஏற்று, தனியர் கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி காலம் தாழ்த்தி சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தை ஏற்று, வணிகவரித் துறையில், திருநெல்வேலி கோட்டம், பாளையங்கோட்டை, வணிகவரி அலுவலர் அலுவலகத்தில் கருணையடிப்படையில் பணி

நியமனம் பெற்ற திரு பா.பாலகிருஷ்ணன் என்பவரின் பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் அவர் பணியேற்ற நாளான 20.04.2007 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்யும் பொருட்டு மூன்றில் படிக்கப்பட்ட அரசாணைக்கு தளர்வளித்து தனியரின் பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் 20.04.2007 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

3. இவ்வாணையின்படி தனியரின் பணி முன்தேதியிட்டு வரன்முறைப்படுத்தப்படுவதால், ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் ஊதிய நிலுவைத் தொகைகள் ஏதுமிருப்பின், அவற்றை தனியர் பெற்றிட விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. மேலும், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட வணிகவரி ஆணையரின் கருத்துருவுடன் பெறப்பட்ட அசல் சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் முதன்மைச் செயலாளர் / வணிகவரி ஆணையருக்கு அனுப்பப்படுகிறது. அவற்றைப் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையை அரசுக்கு அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா.ஜோதி நிர்மலாசாமி
அரசுச் செயலாளர்

பெறுநர்:
திரு பா.பாலகிருஷ்ணன், இளநிலை உதவியாளர்,
திருநெல்வேலி கோட்டம்.
(முதன்மைச் செயலாளர் / வணிகவரி ஆணையர்,
சென்னை-5 வழியாக)
முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை-5.
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர்.
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர்,
சென்னை-5 வழியாக)

நகல்:
இணை ஆணையர் (மா.வ), திருநெல்வேலி கோட்டம்.
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர்,
சென்னை-5 வழியாக).
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை - 9.
தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாட்டுத் (ட்டி-1) துறை,
சென்னை - 9.
மாண்புமிகு அமைச்சர் (வணிகவரி மற்றும் பதிவுத்துறை) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை -9.
மாண்புமிகு அமைச்சர் (தொழிலாளர் நலன்) அவர்களின் சிறப்பு நேர்முக
உதவியாளர், சென்னை-9.
அரசுச் செயலாளரின் தனிச் செயலர்,
வணிகவரி மற்றும் பதிவுத் துறை, சென்னை-9.
இருப்புக்கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

4/10/2021

(மா. இராமகிருஷ்ணன்)
அரசுச் சார்புச் செயலாளர்